1984 மார்ச் 8]

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதவைப் பெண்களுக்கு திருமண நன்கொடை என்ற முறையிலோ அல்லது அரசு மானியம் என்ற முறையிலோ கொடுக்கக்கூடிய பணம் விண்ணப்பம் செய்யக்கூடிய அத்தனை விதவைப் பெண்களுக்கும் கொடுக்கப்படுமா? ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை பேர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்? அதேபோல் கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கும் ஏதேனும் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்திற்கு உதவி செய்வது என்பது ஆதி திராவிடத் துறையைச் சார்ந்தது. சமூக நலத்துறையின் மூலமாக விதவைத் தாய்மார்களின் பெண்களுடைய திருமணத்திற்காகத்தான் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. எவ்வளவு பேர்கள் மனு போட்டு இருக்கிறார்கள் என்ற அளவிற்கு கணக்கிட முடியாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறார்களோ, அந்த அடிப்படையிலே அந்த ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு மனுக்கள் வந்து, தகுதியான முறையில் அவைகள் இருக்குமானால், நிச்சயமாக அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

காரிமங்கலம் மற்றும் மாரண்டஅள்ளி பேரூராட்சிப் பகுதிகளுக்கான கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

229—(*வினா 17407)—திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் தேர்வுநிலைப் பேரூராட்சி, மாரண்டஅள்ளிப் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகள் சுற்றுப்புற கிராமங்களுக்கு சுமார் 15 கிலோ மீட்டர் சுற்றளவிற்குக் கால்நடை மருத்துவமனை இல்லாததால் அந்தப் பகுதியில் புதியதாக ஏற்படுத்த உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள காரிமங்கலத்தில் 1983-84இல் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் திறக்க அரசு பரிசீலனை செய்து, ஏற்கனவே அப்பகுதியில் இயங்கிவரும் மருத்துவ நிலையங்களைக் கருதியும் நிதி ஒதுக்கீட்டைக் கருதியும் அவ்விடத்தில் கால்நடை மருந்தகம் துவங்க ஆணையிடவில்லை. மாரண்டஅள்ளியிலும் மருந்தகம் அமைக்க உத்தேசம் இல்லை.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோடு வட்டத்தில் காரிமங்கலம் மற்றும் மாரண்டஅள்ளி ஆகிய நகரங்கள் சுற்றுப்புற கிராமங்களுக்கு 15 கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே தனியாக கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று 2 ஆண்டுக் காலமாக கேட்கப்பட்டு வந்து, சென்ற ஆண்டு பரிசீலனை செய்து அவைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது அவைகளை அமைக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரண்டஅள்ளியில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில்பங்குத் தொகை செலுத்த, ஒன்றியத்தில் நிதி வசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பிறகு அங்கு ஒரு ஏக்கர் நிலம் கூட இல்லை என்ற ஒரு விவரம் கூட இங்கே எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், மாரண்ட அள்ளியில் கால்நடை மருந்தகம் கட்ட, முழுமையான பிரேரணை தர்மபுரி கால்நடை உதவி இயக்குநரிடமிருந்து பெறப் படவில்லை. எனவே, மாரண்ட அள்ளியில் புதியதாக ஒரு கால் நடை மருந்தகம் தொடங்குவதற்கான உத்தேசம் இல்லை.

(முற்பகல் 10–10)

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காரிமங்கலத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே அதை அரசு எடுத்து நடத்தும் என்று அறிவித்து, நிலுவையில் உள்ளது. அதுதான் எடுக்கப்படுமா என்று கேட்டேன். மாரண்ட அள்ளி யில் என்னென்ன வசதிகள் வேண்டுமோ, அவைகளை அரசுக்கு செய்துதர நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் தற்போது நிலுவையில் உள்ள காரிமங்கலத்தின் நிலை என்ன? அந்த மருத்துவமனை இந்த ஆண்டாவது எடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப, இந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்யும்.

புக்கத்துரை கிராம கால்நடை மருத்துவமனைக் கட்டிடம்.

230—(*வினா எண். 18010)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—